மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், இலுப்பூர்

அசல் வழக்கு எண். **97/2019**

2023ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 20ம் நாள் Indian Oaths Act–1969 பிரிவு –6(2)ன் ஏற்பாட்டின்படி வாதி தரப்பு சாட்சியத்தின் வாக்குமூலம் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார்.

(சாட்சி அவர் கூறும் வாக்குமூலத்தை நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யும் போது அவர் உடனுக்குடன் பார்க்கும் விதமாக அவர் முன்பாக ஒரு கணினி திரை வைக்கப்பட்டுள்ளது).

நாள் : 20.12.2023

வா.சா.: PW – 1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அடைக்கன் | தந்தை பெயர் | : | ஆ.அடைக்கன் |
| கிராமம் | : | சொரியம்பட்டி, எண்ணை அஞ்சல் | தாலுகா | : | இலுப்பூர் |
| சமயம் | : | | ஜாதி | : | |
| வயது | : | 43 | தொழில் | : | ஜவுளிகடையில் வேலை |

<u>முதல்விசாரணை</u>

நான் இவ்வழக்கின் வாதி ஆவேன். எனது தரப்பு நிரூபண வாக்குமூலத்தை வாதி தரப்பு சாட்சியமாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். அத்துடன் வாதி தரப்பு சான்றாவணங்களாக கீழ்க்கண்ட ஆவணங்களை குறியீடு செய்யப்படுகிறது.

1) 26.02.2018 தாவாச்சொத்துக்கு 1ம் வாதியின் தந்தையும், 2 முதல் 5 வாதிகளின் தந்தை வழி தாத்தாவுமான கூ.ஆறுமுகம் அவர்கள் பெயரில் பதிவாகியுள்ள Survey Land Record உண்மைநகல் **(வா.சா.ஆ.1/PW1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2) 07.05.2001 தாவாச் சொத்துக்கு இதர கூ.ஆறுமுகம பெயரில் உள்ள இதர சொத்துக்களுக்கும், இந்த 1ம் வாதி மற்றும் சகோதரர் பழனிச்சாமி ஆகியோர்கள் பெயர்களுக்கு பட்டா மாறுதல் செய்து உத்தரவிடபப்பட்ட பட்டா மாறுதல் உத்தரவு சார்வான நகல் **(வா.சா.ஆ.2/PW1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது,

3) 15.05.2001 தாவாச் சொத்துக்கும் இன்னபிற சொத்துக்களுக்கும் இந்த 1ம் வாதி மற்றும் சகோதரர் பழனிச்சாமி பெயர்களில் பதிவாகியுள்ள 10ல் 1 சிட்டா உண்மை நகல் **(வா.சா.ஆ.3/PW1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4) 28.04.2008 1ம் வாதியின் சகோதரர் பழனிச்சாமி அவர்களின் இறப்புச்சான்று அசல் **(வா.சா.ஆ.4/PW1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5) தாவாச்சொத்துக்கும் இன்னபிற சொத்துக்களுக்கும் 1ம் வாதி மற்றும் பழனிச்சாமி ஆகியோர்கள் பெயரில் உள்ள கணினி சிட்டா சான்றிட்ட நகல் **(வா.சா.ஆ.5/PW1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6) 21.08.2017 தாவா சொத்துக்கு வில்லங்கச்சான்று சான்றிட்ட நகல் **(வா.சா.ஆ.6/PW1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7) 11.09.2017 தாவாச் சொத்துக்குரிய வில்லங்க சான்று சான்றிட்ட நகல் **(வா.சா.ஆ.7/PW1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

8) தாவாச் சொத்துக்கான வாய்தா ரசீதுகள் (எண்ணிக்கை –9) அசல் **(வா.சா.ஆ.8/PW1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

9) 14.11.2017 தாவாச் சொத்துக்கு சம்மந்தப்பட்ட கோர்வை புலப்பட நகல் உண்மை நகல் **(வா.சா.ஆ.9/PW1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

10) 20.11.2017 வாதிகள் தரப்பில் புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு கொடுக்கப்பட்ட மனுவிற்கு கொடுக்கப்பட்ட ஒப்புகைச்சீட்டு**(வா.சா.ஆ.10/PW1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

11) 26.12.2017 இலுப்பூர் கோட்ட அலுவலர் இலுப்பூர் வாதிக்கு வட்டாட்சியர் அவர்களுக்கு எழுதிய அவசரக்குறிப்பாணை (ந.க.அ.3/6555/2017) சார்வான நகல் **(வா.சா.ஆ.11/PW1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

12) 10.10.2018 வாதிகள், பிரதிவாதிகளுக்கு அனுப்பிய வழக்கு முன்னறிவிப்பு(அஞ்சலக ரசீதுகளுடன்) அலுவலக நகல் **(வா.சா.ஆ.12/PW1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

13) 13.10.2018 மேற்படி வழக்கு முன்னறிவிப்பை பிரதிவாதிகள் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டைகள் (2 எண்ணிக்கைகள்) அசல் **(வா.சா.ஆ.13/PW1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

14) 26.10.2018 பிரதிவாதிகளின் வழக்கறிஞர் வாதியின் வழக்கறிஞருக்கு கொடுத்த பதில் அறிவிப்பு அசல் **(வா.சா.ஆ.14/PW1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

15) 13.12.2018 தாவாச் சொத்திற்கான சந்தை மதிப்பு பற்றிய இண்டர்நெட்டில் மதிப்பு சீட்டு பதிவிறக்கம் செய்யப்பட்டது. **(வா.சா.ஆ.15/PW1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

**பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணைக்காக இவ்வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

//sd/–அடைக்கன்,
PW.1.

//sd//– எஸ்.அன்புதாசன்,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், இலுப்பூர்